Apollo Sindoori
Excellence in Hospitality

21st August, 2020

To,
Listing Department
National Stock Exchange of India Limited
Exchange Plaza, 5th floor,
Bandra- Kurla Complex, Bandra(E),
Mumbai-400 051

**SUB.: - ADVERTISEMENT COPIES**
**SCRIP ID: APOLSINHOT**

Dear Sir/Madam,

Sub: Regulation 47 of the Securities and Exchange Board of India (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015.

As required Regulation 47 of the Securities and Exchange Board of India (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015, please find enclosed herewith the Newspaper Advertisement published in Times of India (English) and Makkal Kural (Tamil) dated on 21st August, 2020 regarding Notice of AGM, Book closure and E-voting information.

This is for your kind information.

You are requested to take the above on your records.

Thanking you

Yours truly,

APOLLO SINDOORI HOTELS LTD. CHENNAI

Rupali Sharma
Company Secretary

08:02
Times Of India | e-Editi...
epaper.timesgroup.com
Sections
Date
Search
Tools
Updates
Pages

TIMES NATION

RAJIV GANDHI'S CONTRIBUTIONS TO IT SECTOR WILL ALWAYS BE REMEMBERED, SAYS NAIDU

NATIONAL CONFERENCE LEADERS MEET AT FAROOQ ABDULLAH'S SRINAGAR HOUSE

## Now, actor Sonu Sood comes to aid of C'garh girl

## Manjhi rocks Bihar grand alliance boat; relative of Lalu joins JD(U)

HAM(S) Denies Merger With JD(U), May Ally With Another Group

## Key accused in ₹5,600cr NSEL scam detained in Abu Dhabi

## Covid-19 prompts K'taka rural students to shift from pvt to govt schools

## Kerala govt & oppn unite in Adani battle; Tharoor backs Centre

TIRUVANANTHAPURAM AIRPORT PRIVATISATION

Online Training Programmes | in - English
EXPORT/IMPORT CLEARANCE PROCEDURE

Online Training Programmes | in - English
GST with TALLY ERP. 9

BIHAR COMBINED ENTRANCE COMPETITIVE EXAMINATION BOARD
POST GRADUATE MEDICAL ADMISSION-COUNSELLING (PGMAC)-2020
Notice for MOP UP Counselling (Medical)

INDIAN MARITIME UNIVERSITY
CHENNAI CAMPUS
(A Central University, Government of India)
EAST COAST ROAD, UTHANDI, CHENNAI - 600 119
Lateral Entry (AY 2020-21)

JOB VACANCY FOR DIRECTOR AMPD CHENNAI

PRAYAGRAJ NAGAR NIGAM

TIMES ascent

Petronet LNG Limited
Invites applications for the post of :
Managing Director & CEO
For detailed advertisement & submission of online application,
Please visit Careers section of our website- www.petronetlng.com
from 20th Aug. 2020, 09:00 hrs.
to 9th Sept. 2020, 23:59 hrs.
Addendum(s)/Corrigendum(s), if any, shall be notified in above website only.

Petronet LNG Limited
Invites applications for the post of :
Director (Business Development & Marketing)
For detailed advertisement & submission of online application, please visit Careers section of our website- www.petronetlng.com
from 20th Aug. 2020, 09:00 hrs.
to 9th Sept. 2020, 23:59 hrs.
Addendum(s)/Corrigendum(s), if any, shall be notified in above website only.

APOLLO SINDOORI HOTELS LIMITED
CIN: L72200TG1982PLC041366
NOTICE OF 33rd ANNUAL GENERAL MEETING, REMOTE E-VOTING, BOOK CLOSURE, DISPATCH OF ANNUAL REPORT

TIRUPATHI SMART CITY CORPORATION LIMITED
NOTICE INVITING TENDER

KAMLA NEHRU INSTITUTE OF TECHNOLOGY
SULTANPUR- U.P. 228118
APPOINTMENTS
Applications are invited for the post of Director, Kamla Nehru Institute of Technology, Sultanpur, against Advertisement No. 1150/SE(E)/2020 Dated 20.08.2020, on qualification and other details visit institute website www.knit.ac.in . The last date of submitting application is 21.09.2020.
( Member Secretary)
Board of Governors
Kamla Nehru Institute of Technology, Sultanpur

# கோவை மாநகராட்சி பள்ளியில் இந்தி 3–வது பாடம் என்ற செய்தி அவதூறான செய்தி

# 2–வது தலைநகரம் பற்றி பேச்சு; அரசின் கருத்து அல்ல: எடப்பாடி பழனிசாமி பேட்டி

## மாவட்டந்தோறும் நடப்பது விழா அல்ல; கொரோனா தடுப்பு பணி ஆய்வு

## தி.மு.க. புகாருக்கு பதில்

தர்மபுரி, ஆக.21–

**இரண்டாவது தலைநகர் பற்றிய பேச்சு அரசின் கருத்து அல்ல என்று முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி கூறினார்.**

தர்மபுரியில் மாவட்ட வளர்ச்சி பணிகள், கொரோனா தடுப்பு பணிகள் குறித்து ஆய்வு நடத்திய பின் செய்தியாளர்களுக்கு முதலமைச்சர் பேட்டி அளித்தார்.

கேள்வி: தருமபுரி மாவட்டத்தில் ஒகேனக்கல் – காவேரி உபரிநீர் திட்டம் செயல்படுத்தப்படுமா...

பதில்: அந்த திட்டம் அரசின் ஆய்வில் இருக்கிறது. ஏன் என்றால், உயரம் அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே, ஆய்வு செய்து தான் இந்த திட்டத்தை நிறைவேற்ற முடியும்.

கேள்வி: இரண்டாவது தலைநகரம் பற்றிய பேச்சு இப்போது அதிகமாக இருக்கிறது. அதைப் பற்றி அரசின் நிலைப்பாடு என்ன?

பதில்: அது அவருடைய கருத்து. அது அரசினுடைய கருத்து அல்ல.

கேள்வி: ஆந்திரப்பிரதேசத்தில் அம்மாநிலத்தை சேர்ந்தவர்களுக்கு தான் வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்படுகிறது. அதேபோன்று தமிழகத்திலும் செயல்படுத்தப்படுமா?

பதில்: அம்மாவுடைய அரசு, கொரோனா காலத்திலும் கூட புதிய புதிய தொழில்களை தமிழகத்திற்கு கொண்டு வந்துள்ளது. பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் மதிப்பீட்டிலான தொழில் முதலீடுகளை ஈர்த்து, இந்த கொரோனா காலத்திலும் அதிக தொழில் முதலீடுகளை ஈர்த்த மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. இன்றைக்கு சிறுதொழில்கள் அதிகமாக இருக்கின்ற மாநிலம் தமிழ்நாடு.

உலகத் தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தி சுமார் 3 லட்சம் கோடி ரூபாய்க்கு மேலான தொழில் முதலீடுகளை ஈர்த்திருக்கிறோம். அந்தப் பணிகள் எல்லாம் நடைபெற்று கொண்டிருக்கின்றன. புதிய தொழில்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடுகின்றோம், அடிக்கல் நாட்டுகின்றோம். அதன்மூலம் வேலைவாய்ப்பு அதிகரித்து கொண்டிருக்கிறது. அதற்கு தேவையான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது.

கேள்வி: வத்தல் மலை சுற்றுலா தலமாக அமைக்கப்படுமா...

பதில்: அது அரசினுடைய பரிசீலனையில் இருந்து கொண்டு இருக்கிறது. படிப்படியாக ஒவ்வொரு திட்டமாக நிறைவேற்றப்படும்.

### மும்மொழிக் கொள்கை

கேள்வி: தமிழ்நாடு அரசு மும்மொழிக் கொள்கைக்கு எதிராக உள்ள நிலையில் கோயம்புத்தூர் மாநகராட்சி பள்ளிகளில் இந்தி மூன்றாவது பாடமாக எடுக்க விரும்புகிறீர்களா என்று கேட்கப்பட்டுள்ளதே...

பதில்: இது தவறான செய்தி. இது குறித்து அனைத்து ஊடகங்களிலும் பத்திரிகைகளிலும் கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் தெரிவித்துவிட்டார். அந்த பார்மெட் தவறானது. போலி பார்மெட்டை வெளியிட்டு தவறான, அவதூறான செய்தியை பரப்பி இருக்கிறார்கள். அவ்வாறு பரப்பியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு உத்தரவு வழங்கப்பட்டு இருக்கிறது.

கேள்வி: தருமபுரி மாவட்டத்தில் மலர் சாகுபடி அதிகமாக இருக்கிறது. அரசு போக்குவரத்திற்கு வசதி ஏற்படுத்தி கொடுத்தாலும், சந்தை வாய்ப்புகள் இல்லாததால் தோட்டத்திலே மலர்கள் கருகும் நிலை உள்ளது. மலர் சாகுபடிக்கு கர்நாடக அரசு வழங்கியதை போல தமிழ்நாடு அரசால் நிவாரணம் ஏதாவது வழங்கப்படுமா?

### மலர் சாகுபடி

பதில்: தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் சேலம் மாவட்டங்களில் நம்முடைய வேளாண் பெருமக்கள் அதிகளவில் மலர் சாகுபடி செய்து வருகிறார்கள். இவர்களுக்கு சரியான விலை கிடைக்க வேண்டும் என்பதற்காக தான் சர்வதேச மலர் ஏல மையத்தை கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூரில் சுமார் 20 கோடி ரூபாயில் இந்த திட்டம் துவங்கப்பட இருக்கிறது. விவசாயிகள் தங்கள் நிலங்களில் உற்பத்தி செய்கின்ற மலர்களை அங்கே சென்று விற்பனை செய்து நல்ல லாபம் பெறலாம்.

கொரோனா வைரஸ் தொற்றால் விவசாயிகள் மட்டுமல்ல, உலகம் முழுவதும் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்பதற்காக தான் அம்மாவின் அரசு அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு 1000 ரூபாய் நிவாரணம் கொடுத்தது. அதுமட்டுமல்லாமல், ஏப்ரல், மே, ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் விலையில்லா அரிசி, பருப்பு, சர்க்கரை, எண்ணெய் கொடுத்தோம். அதேபோல அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு 2000 ரூபாய் கொடுத்தோம். இப்படி எல்லா வகையிலும் அரசு உதவி செய்து வருகிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

### தி.மு.க.வுக்கு பதில்

கேள்வி: அரசு விழாவில் தி.மு.க. தரப்பிலிருந்து எம்.பி.யோ எம்.எல்.ஏ.வோ கலந்து கொள்ளாமல் இருப்பதால், தி.மு.க. தரப்பு இது அரசு விழாவா அல்லது அண்ணா திமுகவுடைய கட்சி நிகழ்ச்சியா என்று கேள்வி எழுப்புகிறார்களே...

பதில்: இது நிகழ்ச்சியும் அல்ல, விழாவும் அல்ல. கொரோனா தடுப்பு பணி இந்த மாவட்டத்தில் எப்படி நடைபெறுகிறது என்பதை ஆய்வு செய்து ஆலோசனை வழங்குவதற்காகவும், அரசு அறிவித்த திட்டங்களை மாவட்ட நிர்வாகம் எவ்வாறு செயல்படுத்துகிறது என்பது குறித்தும் ஆய்வு செய்ய நான் வந்திருக்கிறேன். வேறு எதற்காகவும் அல்ல. இது விழா கிடையாது. இன்று உலகையே அச்சுறுத்தி கொண்டிருக்கிற கொரோனா தொற்று நோய், தருமபுரி மாவட்டத்தில் முதலில் குறைவாகவும் தற்போது படிப்படியாக அதிகரித்தும் வந்தது. இந்த மாவட்ட நிர்வாகம் அதை கட்டுப்படுத்த எந்த அளவிற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை ஆய்வு செய்வதற்கு தான் நான் வந்திருக்கிறேன்.

கேள்வி: பின்னணி பாடகர் எஸ்.பி. பாலசுப்பிரமணியத்திற்காக திரைப்படத் துறையினர் கூட்டுப் பிரார்த்தனையில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவரது உடல்நிலை குறித்து நீங்கள் கேட்டறிந்தீர்களா?

பதில்: மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சரிடம் நான் ஏற்கனவே இது குறித்து விசாரித்து அவருக்கு தேவையான சிகிச்சை அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். அவரும், எஸ்.பி. பாலசுப்பிரமணியம் சிகிச்சை பெற்று வரும் மருத்துவமனையை அணுகி தகுந்த சிகிச்சை அளிக்க வேண்டும் என்று தெரிவித்திருக்கின்றார். கொரோனா வைரஸ் தொற்று நோயால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் அவர் குணமடைய வேண்டும் என்று எல்லோரும் பிரார்த்தனை செய்கிறார்கள். அவர் குணமடைந்து வீடு திரும்ப வேண்டும் என்று இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

### சாலை விரிவாக்கம்

கேள்வி: தருமபுரி மாவட்டத்தில் சாலைகளை விரிவாக்கம் செய்யப்பட வேண்டும் என்பது மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இருக்கிறது. இது குறித்து...

பதில்: ஒவ்வொரு திட்டமாக நாங்கள் எடுத்து செயல்படுத்தி கொண்டு வருகிறோம். எல்லா திட்டங்களையும் ஒரே நேரத்தில் நிறைவேற்ற முடியாது. புரட்சித் தலைவி அம்மா 2011–ல் என்னை நெடுஞ்சாலை துறை அமைச்சராக நியமித்தார். 2011லிருந்து எல்லா மாவட்டங்களிலும் பல்வேறு பாலங்களை கட்டியிருக்கிறோம். இன்றைக்கு கூட 297 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சேலம், திருப்பத்தூர், வாணியம்பாடி சாலையை நான்கு வழிச் சாலையாக மேம்பாடு செய்யப்பட்டு வருகிறது. அதேபோல ஊத்தங்கரை இருவழிச் சாலையை 302 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நான்கு வழிச்சாலையாக மேம்பாடு செய்ய உள்ளோம். அரூர் புறவழிச்சாலை, பென்னாகரம் சாலை அகலப்படுத்தும் திட்டம் போன்று ஒவ்வொரு பகுதியாக சாலை விரிவாக்கம் செய்ய தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. இவ்வாறு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.



முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி நேற்று வேலூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில் அமைக்கப்பட்டுள்ள புகைப்பட கண்காட்சியை பார்வையிட்டார். உடன் அமைச்சர்கள் கே.சி. வீரமணி, நிலோபர் கபில், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், வேலூர் மாவட்ட கலெக்டர் அ. சண்முகம் சுந்தரம், திருப்பத்தூர் மாவட்ட கலெக்டர் எம்.பி. சிவன் அருள், ராணிப்பேட்டை மாவட்ட கலெக்டர் எஸ். திவ்யதர்ஷினி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

# சென்னை ராஜீவ்காந்தி மருத்துவமனையில் நல்லகண்ணு அனுமதி

சென்னை, ஆக.21–

கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்தத் தலைவர் ஆர்.நல்லகண்ணு உடல்நலக் குறைவு காரணமாக சென்னை ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் நேற்று இரவு சேர்க்கப்பட்டார்.

சென்னையில் வசித்து வரும் நல்லகண்ணுவுக்கு நேற்று இரவு லேசான காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து இவர் சென்னை ராஜீவ் காந்தி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவருக்கு தொடர்ந்து மருத்துவ பரிசோதனைகள் நடைபெற்று வருகின்றன. அவருக்கு சர்க்கரை நோய், ரத்த அழுத்தம் போன்ற வேறு எந்தப் பிரச்சினைகளும் இல்லை.

தற்போது அவர் நலமுடன் இருக்கிறார். கட்சியினர் மற்றும் நண்பர்கள், அவரை தொலைபேசியில் தொடர்பு கொண்டும், நேரில் பார்த்தும் நலம் விசாரிக்க முயற்சிப்பதை தவிர்க்க வேண்டும் என கேட்டுக் கொள்கின்றோம் என்று கம்யூனிஸ்ட் கட்சி தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தெரிவித்துள்ளார்.

# உலகம் முழுவதும் 2.28 கோடி பேருக்கு கொரோனா தொற்று

ஜெனீவா, ஆக. 21–

உலகம் முழுவதும் கொரோனா தொற்று பாதித்தவர்களின் எண்ணிக்கை 2 கோடியே 28 லட்சத்து 56 ஆயிரத்து 134 கோடியாக உயர்ந்துள்ளது.

ஒரே நாளில் 6,554 பேர் பலியானதை அடுத்து பலியானோர் எண்ணிக்கை 7 லட்சத்து 96 ஆயிரத்து 992 ஆக அதிகரித்துள்ளன

உலக நாடுகளில் கொரோனா நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டவா்களின் எண்ணிக்கை இன்று காலை நிலவரப்படி, புதிதாக 2 லட்சத்து 63 ஆயிரம் பேருக்கு உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 2 கோடியே 28 லட்சத்து 56 ஆயிரத்து 134 கோடியைக் கடந்தது. அமெரிக்காவில் 57 லட்சத்து 46 ஆயிரத்து 272 பேரும், பிரேஸிலில் 35 லட்சத்து 5 ஆயிரத்து 97 பேரும், ரஷியாவில் 9 லட்சத்து 42 ஆயிரத்து 106 பேரும் இந்தியாவில் 29 லட்சத்து 4 ஆயிரத்து 329 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 24 மணி நேரத்தில் உலகம் முழுவதும் நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டு 6,554 பேர் உயிரிழந்தனர். இதையடுத்து கொரோனா தொற்றால் உயிரிழந்தவா்களின் எண்ணிக்கை 7 லட்சத்து 96 ஆயிரத்து 992 ஆக இருந்தது. உலகம் முழுவதும் நோய்த் தொற்றில் இருந்து குணமடைந்தோரின் எண்ணிக்கை 1 கோடியே 55 லட்சத்து 11 ஆயிரத்து 669 ஆகவும், 65 லட்சத்து 47 ஆயிரத்து 473 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.



முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் தருமபுரி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் மாவட்ட விவசாய சங்கங்களின் பிரதிநிதிகளுடன் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது.

## சோதனையான இந்த காலத்திலும்

# விவசாயிகள் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக அரசு உதவிகள்: எடப்பாடி பழனிசாமி பேச்சு

## தருமபுரி மாவட்டத்தில் நடந்த ஆய்வுப் பணிகள்

தர்மபுரி ஆக.21–

**சோதனையான இந்த கால கட்டத்திலும் விவசாயிகள் பாதிக்கப்பட கூடாது என்பதற்காக அனைத்து உதவிகளையும் அரசு செய்து வருகிறது என்று முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி கூறினார்.**

முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் தருமபுரி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில், மாவட்ட வளர்ச்சித் திட்டப் பணிகள் மற்றும் கொரோனா நோய்த் தடுப்புப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் கூறியதாவது:–

அம்மாவின் அரசு, உலகையே அச்சுறுத்தி கொண்டிருக்கிற கொரோனா வைரஸ் நோய் தொற்று தடுப்புப் பணிகளை சிறப்பான முறையில் மேற்கொண்டு வருகிறது. கொரோனா நோய் தொற்று தடுப்புப் பணிகள் குறித்தும் மாவட்ட வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்தும் ஒவ்வொரு மாவட்டமாக சென்று ஆய்வுக் கூட்டம் நடத்திக் கொண்டிருக்கிறோம். இந்த மாவட்டத்தின் பிரதான தொழில் வேளாண் தொழில் ஆகும். இந்த மாவட்டத்தில் காய்கறிகள், பழங்கள், மலர் விளைச்சல் அதிகம் உள்ளது. எனவே, கொரோனா ஊரடங்கில் விவசாயிகளை பாதிக்கும் வகையில், எந்தத் தடையும் அம்மாவின் அரசால் விதிக்கப்படவில்லை. விவசாயிகள் உற்பத்தி செய்யும் விளைபொருட்களை எளிதாகச் சந்தைப்படுத்த அனைத்து அனுமதிகளும், தேவையான உதவிகளும் வழங்கப்பட்டன.

### வறட்சி நிவாரணம்

தோட்டக்கலைத்துறை மூலமாக, விவசாயிகளிடமிருந்து காய்கறிகள் கொள்முதல் செய்யப்பட்டு, பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. விவசாயிகள் எந்தவகையிலும் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக அரசு தேவையான உதவிகளை இந்தச் சோதனையான காலத்திலும் செய்து கொண்டிருக்கிறது. சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு எவ்வித இடர்பாடும் இல்லாமல் தேவையான பயிர்க் கடனும் வழங்கப்பட்டுள்ளது.

பூச்சிகளால் பயிர்கள் தாக்கப்படும்போது, அம்மாவின் அரசு, வேளாண் துறையினர் மூலம் உடனடியாக பூச்சிகள் தடுப்புப் பணிகளை மேற்கொண்டு விவசாயிகளின் நலனை காத்து வருகிறது. வறட்சி மற்றும் இயற்கை சீற்றங்களினால் வேளாண்மை பயிர்களுக்கு ஏற்படும் இழப்பிற்கு பயிர்க் காப்பீட்டுத் திட்டம் மூலம் இழப்பீட்டுத் தொகையை பெற்றுத் தந்ததும், வறட்சி நிவாரணம் அளித்ததும் அம்மாவின் அரசுதான்.

இதுபோல் வேளாண் பெருமக்களுக்கு பல்வேறு உதவிகளை அம்மாவின் அரசு செய்து வருகிறது. சிறு, குறு விவசாயிகளுக்கு மானிய விலையில் டிராக்டர், பவர் டிரில்லர், விவசாய உபகரணங்கள் வழங்கப்படுகின்றன. பண்ணைக்குட்டை அமைக்க நிதி ஒதுக்கப்படுகிறது. விதை, உர மானியமும் வழங்கப்படுகிறது.

### தடுப்பணைகள்

குடிமராமத்துத் திட்டத்தின் மூலமாக ஏரிகள், குளங்கள், குட்டைகள், ஊரணிகளை தூர்வாருவதற்கு தேவையான நிதியை ஒதுக்கீடு செய்து, தருமபுரி மாவட்டத்திலிருக்கும் பல ஏரிகள் மற்றும் குளங்கள் தூர்வாரப்பட்டிருக்கின்றன. இதன்மூலம், பருவகாலங்களில் பெய்கின்ற மழைநீரை சேமித்து வைக்கும் சூழ்நிலையை நாங்கள் உருவாக்கித் தந்திருக்கிறோம்.

தடுப்பணைகள் கட்டுவதற்காக மூன்றாண்டு காலத் திட்டமாக ரூபாய் 1000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இந்த மாவட்டத்தில் பல்வேறு தடுப்பணைகள் கட்டும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சில பணிகள் அரசின் பரிசீலனையில் இருக்கின்றன.

வறண்ட பகுதிகளில் இருக்கின்ற வேளாண் பெருமக்களுக்கு தேவையான நீர் கிடைப்பதற்காக பல்வேறு திட்டங்களை நிறைவேற்றித் தரவேண்டுமென்று உயர்கல்வித் துறை அமைச்சர் மற்றும் சட்டப்பேரவை உறுப்பினர்கள் கோரிக்கை வைத்தார்கள். குறிப்பாக வேளாண் பெருமக்கள் பயன்பெறும் வகையிலும், நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்திடும் வகையிலும் ஜெர்த்தலாவ் கால்வாயை அமைத்து தர வேண்டும் என்ற கோரிக்கையை அம்மாவின் அரசு ஏற்று, இந்தத் திட்டத்தை செயல்படுத்த இருக்கிறது.

இத்திட்டத்திற்காக பட்டா நிலங்களை கையகப்படுத்த உத்தேசிக்கப்பட்ட புதிய நில எடுப்பு சட்டம் 2013–ன் கீழ், மாவட்ட அளவிலான தனியார் நில எடுப்பு பேச்சுவார்த்தை குழு மூலம் நில உரிமையாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு 7 கிராமங்களுக்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது. நிலம் எடுக்கின்ற பணியை அம்மாவின் அரசு துவங்கியிருக்கிறது.

அதேபோல, எண்ணேகோல் கால்வாய் அமைக்கும் திட்டத்தை நிறைவேற்றும் வகையில், காரிமங்கலம் வட்டம், எலுமிச்சன ஹள்ளி கிராமத்தில் நிலங்களை கையகப்படுத்த உத்தேசிக்கப்பட்டு தனியார் நில எடுப்பு பேச்சுவார்த்தை குழு மூலம் நில உரிமையாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது. நில எடுப்புப் பணி முடிந்தவுடன், தேவையான நிதி ஒதுக்கீடு செய்து, வேளாண் பெருமக்களின் கனவை அம்மாவின் அரசு நிறைவேற்றும்.

மாணவர்களின் உயர்கல்விக்காக அம்மா இருக்கின்றபோதும், தற்போது அம்மாவின் அரசும் பல்வேறு கல்லூரிகளை உருவாக்கித் தந்திருக்கிறது. இந்த மாவட்டத்தில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கான புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

### சட்டக்கல்லூரி கட்டிடம்

உயர்கல்வித் துறை அமைச்சரின் கோரிக்கையான அரசு சட்டக்கல்லூரிக்கு அனுமதி அளித்து, தேவையான கட்டடம் கட்ட ரூபாய் 58 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் ஆரம்பிக்கப்பட்டு, இன்னும் 3 மாத காலத்தில் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

அரூர் புறவழிச்சாலை அமைக்க ரூபாய் 8 கோடி நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ஒகேனக்கல், பென்னாகரம், தருமபுரி, திருப்பத்தூர் சாலையை ரூபாய் 25 கோடி மதிப்பீட்டில் இருவழித் தடத்திலிருந்து நான்கு வழித்தடமாக அகலப்படுத்தும் பணி முடிவுற்றுள்ளது.

சேலம், திருப்பத்தூர், வாணியம்பாடி சாலையை ரூ.297.55 கோடி மதிப்பீட்டில் இருவழித்தடத்திலிருந்து நான்கு வழித்தடமாக அகலப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. தருமபுரி மாவட்டத்தில் 2019–20–ம் ஆண்டு நபார்டு வங்கி நிதியுதவித் திட்டத்தின் கீழ், 3 உயர்மட்ட பாலப் பணிகள் ரூபாய் 18.27 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

2020–21–ம் ஆண்டு நபார்டு வங்கி நிதியுதவித் திட்டத்தின் கீழ், 3 உயர்மட்ட பாலப் பணிகள் ரூ.10.06 கோடி மதிப்பீட்டில் கட்ட அரசின் பரிசீலனையில் உள்ளன. இவ்வாறு பல்வேறு திட்டங்களை அம்மாவின் அரசு தருமபுரி மாவட்டத்தில் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது.

இவ்வாறு முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

# என்ஜினீயரிங் படிப்பில் சேர மாணவர்கள் சான்றிதழ் பதிவேற்றம் செய்ய 24–ந்தேதி வரை அவகாசம்

சென்னை, ஆக.21

என்ஜினீயரிங் படிப்பில் சேருவதற்கு மாணவர்கள் சான்றிதழ் பதிவேற்றம் செய்ய 24ந்தேதி வரை அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது.

என்ஜினீயரிங் படிப்பில் சேருவதற்கான ஆன்லைன் விண்ணப்பப்பதிவு கடந்த மாதம் 15ந்தேதி தொடங்கி, நிறைவு பெற்றது. அதன் தொடர்ச்சியாக விண்ணப்ப கட்டணம் செலுத்திய மாணவர்கள் சான்றிதழ் பதிவேற்றம் செய்ய அறிவுறுத்தப்பட்டு இருந்தனர்.

அதன்படி, விண்ணப்ப கட்டணம் செலுத்திய மாணவர்கள் சான்றிதழ் பதிவேற்றம் செய்து வந்தனர்.

அதற்கான கடைசி நாள் நேற்று என்று ஏற்கனவே கூறப்பட்டு இருந்த நிலையில், மாணவர்களின் கோரிக்கையை ஏற்று, உயர் கல்வித்துறை அமைச்சர் கே.பி. அன்பழகன் சான்றிதழ் பதிவேற்றம் செய்வதற்கான அவகாசத்தை வருகிற 24 ந்தேதி வரை நீட்டித்து அறிவித்திருப்பதாக தமிழ்நாடு என்ஜினீயரிங் மாணவர் சேர்க்கை செயலாளர் புருசோத்தமன் தெரிவித்துள்ளார்.

விண்ணப்ப கட்டணம் செலுத்திய 1 லட்சத்து 33 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களில், நேற்றைய நிலவரப்படி 1 லட்சத்து 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவ–மாணவிகள் சான்றிதழ்களை பதிவேற்றம் செய்து இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.


Apollo Sindoori
Excellence in Hospitality

**அப்பல்லோ சிந்தூரி ஹோட்டல்ஸ் லிமிடெட்**
CIN: L72300TN1998PLC041360
பதிவு அலுவலகம்: அப்பல்லோ சிந்தூரி ஹோட்டல்ஸ் லிமிடெட்
நெ.43/5, தரைதளம், ஹூசைன் மான்சன், கிரீம்ஸ் ரோடு,
ஆயிரம் விளக்கு, சென்னை 600 006.

**22வது வருடாந்திர பொதுப் பேரவை கூட்டம், ரிமோட் எலக்ட்ரானிக் வாக்களிப்பு, கணக்கு புத்தகங்கள் மூடுதல் வருடாந்திர அறிக்கை அனுப்புதல் பற்றிய அறிவிப்பு**

கம்பெனியின் உறுப்பினர்களின் 22வது வருடாந்திர பொதுக்கூட்டம் வியாழக்கிழமை 17 செப்டம்பர் 2020 அன்று காலை 10.30 மணிக்கு வீடியோ கான்பரன்ஸ் (VC)/ இதர ஆடியோ விசுவல் தளத்தில் (OAVM) (இவை எலக்ரானிக் முறை என இனி குறிப்பிடப்படும்) நடைபெறும்.

22வது வருடாந்திர பேரவைக்கூட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்ட வணிகத்தை நிறைவேற்ற நடைபெறும் மற்றும் 22வது வருடாந்திர பேரவைக்கூட்டம் பற்றிய அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.தற்போது நிலவி வரும் கோரோனா –19, தொற்று நோயைக் கருத்தில் கொண்டு, கார்ப்பரேட் விவகாரங்கள் அமைச்சகத்தின் (MCA) மே 5, 2020 தேதியிட்ட சுற்றறிக்கை மற்றும் ஏப்ரல் 8, 2020 மற்றும் சுற்றறிக்கை எண்.13, 2020 தேதியிட்ட சுற்றறிக்கைகள் எண்.14/2020, 17/2020 மற்றும் 20/2020 மற்றும் மே 12, 2020 தேதியிட்ட SEBI சுற்றறிக்கை எண்.SEBI/HO/CFD/CMD1/CIR/P/2020/79 (கூட்டாக ''மேற்சொன்ன சுற்றறிக்கைகள்'' என்று குறிப்பிடப்படுகிறது)ன்படி, பொதுக் கூட்டத்தைக் கூட்டாமல் சில அலுவல்களை அஞ்சலட வாக்கு மூலம் நிறைவேற்றுவது உட்பட வீடியோ கான்பரன்சிங் (VC) அல்லது பிற ஆடியோ விசுவல் வழிமுறைகள்(OAVM) மூலமாக வருடாந்திர பொதுக்கூட்டம் பொது இடங்களில் உறுப்பினர்கள் நேரில் கூடக் கூடாது என்று முறையில் கூட்டுவதற்கு அனுமதித்துள்ளது.

மேற்சொன்ன சுற்றறிக்கைகள் மற்றும் SEBI (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள்ன்படி, கம்பெனி/டெபாசிட்டரிகள்/பங்கு பரிமாற்ற முகவரிடம் இமெயில் முகவரிகளை பதிவு செய்த உறுப்பினர்களுக்கு மட்டுமே மின்னணு மூலமாக 22வது வருடாந்திர பொதுக்கூட்டம்/http://apollosindoori.com/investor.php, Cehntral Depository Services (India) Ltd (CDSL வலைதளம் www.evotingindia.com மற்றும் அஞ்சல் வாக்கு அறிவிப்பு ஆகியவை அனுப்பப்படும். கம்பெனியின் இணையதளம் மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்சேஞ் ஆப் இந்தியா லிமிடெட்டின் இணையதளம் வருடாந்திர பொதுக்கூட்டம்/அசாதாரண பொதுக்கூட்டம்/அஞ்சல் வாக்கு அறிவிப்பு ஆகியவை தெரிவிக்கும்போது அதற்குரிய அறிக்கைகளை மேற்கண்ட இணையதளத்தின் மூலமாகவும் உறுப்பினர்கள் தெரிந்து கொள்ளலாம்.

நீங்கள் உங்களது இமெயில் முகவரியை கம்பெனி/டெபாசிட்டரிகள்/பங்கு பரிமாற்ற முகவரிடம் பதிவு செய்யவில்லை என்றால், பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றி பதிவு செய்து/புதுப்பித்துக் கொள்ளலாம். இமெயில் ஐடி-க்களை புதுப்பிப்பது, பொதுக்கூட்டம்/அஞ்சல் வாக்கு அறிக்கை மற்றும் வருடாந்திர அறிக்கைக்கான அறிவிப்பின் நகலை உங்களுக்கு வழங்கவும், மற்றும் நீங்கள் தீர்மானங்களில் பங்கேற்கவும், வாக்களிக்கவும் உதவும்.

22வது வருடாந்திர பேரவையில் பங்கேற்று ரிமோட் எலக்ட்ரானிக் வாக்களித்தல் அல்லது இ– வாக்களிக்கும் முறையை 22வது பேரவை கூட்டம் நடைபெறும் போது உறுப்பினர் இணைந்து வாக்களிக்கலாம். இது பற்றி 22வது வருடாந்திர பேரவை கூட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2013 கம்பெனிகள் சட்டம் பிரிவு 103ன்கீழ் 'கோரம்' எண்ணிக்கைகாக உறுப்பினர்கள் பங்கேற்று VC/OAVM வசதி மூலம் வாக்களிக்கும் பட்சத்தில் எண்ணப்படும். இந்த 22வது வருடாந்திர பேரவை கூட்ட அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கை ஆகியவற்றை கம்பெனி வலைதளத்தில் பார்க்கலாம்.

பங்குதாரர்களின் இ–மெயில் முகவரி ஏற்கனவே கம்பெனி/ இதன் பதிவாளர் மற்றும் பங்கு மாற்ற ஏஜெண்ட் ''RTA'' /டெபாசிட்டரிஸ் இ–வாக்களிக்க இ–மெயில் முகவரிக்கு அனுப்பப்படும்.

**இமெயில் ஐடியைப் பதிவு செய்ய/ புதுப்பிப்பதற்கான வழிமுறைகள்:**

| | |
|---|---|
| பிசிக்கல் ஹோல்டிங் | RTA வலைதளத்தில் இணைந்து பங்குதார் விபரத்தை பதிவு செய்து, நடப்பு தேவையான விபரத்தை அப்லோட் செய்யலாம். ஏதும் சந்தேகம் இருந்தால் இமெயில் முகவரியை பதிவு செய்ய ஒரு மெயிலை கம்பெனியின் பதிவாளர் மற்றும் பரிமாற்ற முகவரான கேமியோ கார்ப்பரேட் சர்வீஸ் லிமிடெட் (''கேமியோ'') அவர்களின் **inatagm@cameoindia.com**க்கு அனுப்ப வேண்டும். |
| டிமேட் ஹோல்டிங் | தயவுசெய்து உங்கள் டெபாசிட்டரி பார்டிசிபேண்டை (டிபி) தொடர்பு கொண்டு உங்கள் இமெயில் முகவரியை பதிவு செய்யுங்கள். உங்கள் இ–மெயில் முகவரியை உங்கள் டீமேடு கணக்கை 'டிபி' குறிப்பிட்டபடி சேர்க்கவும். |

MCA மற்றும் செபி அமைப்பு வருடாந்திர பேரவைக்கூட்டத்தை வீடியோ கான்பரன்ஸ் / இது ஆடியோ விசுவல் முறையில் நடத்த வெளியிட்ட சுற்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் நாடு முழுவதும் பாதிப்பு இருப்பதால் இதற்கேற்ப, கம்பெனிகள் தங்கள் வருடாந்திர அறிக்கை மற்றும் வருடாந்திர பேரவை நோட்டீஸ் இ–மெயில் மூலம் பங்குதாரர்களுக்கு கடந்த ஆண்டு வரை நேரடியாக வருடாந்திர அறிக்கை தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. எனவே கம்பெனியில் தங்கள் இ–மெயில் முகவரியை பதிவு செய்யாத பங்குதாரர்கள், இனி தங்கள் இ–மெயில் முகவரியை கம்பெனி, /RTAவில் பதிவு செய்து வருடாந்திர அறிக்கை மற்றும் பொது பேரவை நோட்டீசை பெறலாம்.

2013 கம்பெனிகள் கூட்டம் பிரிவு 91ன் கீழ் மற்றும் செபி (LODR) வரைமுறை 2015–ன் 43வது வரை முறைப்படி உறுப்பினர் ரிஜிஸ்தர் மற்றும் கம்பெனியின் பங்கு மாற்ற கணக்கு புத்தகங்கள் 12 செப்டம்பர் 2020 (சனிக்கிழமை) முதல் 17 செப்டம்பர் 2020 வியாழக்கிழமை வரை இரு நாட்களும் சேர்த்து மூடப்பட்டு இருக்கும். என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

**அப்பல்லோ சிந்தூரி ஹோட்டல்ஸ் லிமிடெட்**
ரூபாலி சர்மா,
கம்பெனி செயலாளர்
உறுப்பினர் எண்.A50527

தேதி: 20.08.2020
இடம்: சென்னை